# WORD OF CHRIST
# (கிறிஸ்துவின் வசனம்)
கொலோ 3:16


ஆசிரியர் | ஜூலை
சகோ. அர்ச்சுனன் II கொரி 3;6 | 1993


வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டா-வதாக

இந்த பன்னிரெண்டாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு வருடமாக அற்புதவிதமாக அநேகருக்கு இவ்விதழ் மூலம் சத்தியத்தைச் சொல்ல கர்த்தர் கிருபை செய்தார். தொடர்ந்து உங்களோடு சத்தியத்தை பகிர்ந்துகொள்ள கர்த்தர் கிருபை செய்வாராக! இப்பத்திரிக்கையைப் படித்து முடித்த உடன் மற்றவர்களுக்கும் படிக்க கொடுத்து உதவுங்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை நம்மனைவரோடுங் கூட இருப்பதாக! ஆமென்!

ஆசிரியர்

RK

## WAIT ON THE LORD
## கர்த்தருக்குக் காத்திரு

சங்கீதக்காரனாகிய தாவீது சொல்லுவதை கவனியுங்கள் கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து கர்த்தருக்கே கர்த்திரு சங் 27;14 அன்பான தேவ பிள்ளைகளே நீங்கள் உங்கள் வாழ்க்கையில் கர்த்தருக்குக் காத்திருக்கின்றீர்களா? அப்படி காத்திருப்பீர்களானால் நிச்சயமாக கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வீர்கள். அநேக விசயங்களில் தேவபிள்ளைகள் சோர்வடைந்து விடுகிறார்கள்,

காரணம் என்னவென்று பார்க்கும்போது அவர்களுடைய அவநம்பிக்கையே காரணமாகி விடுகிறது. ஒரு மருத்துவரைப் பார்க்க போகும் நோயாளி டாக்டர் வரும் வரை காத்திருக்கிறார். இந்த டாக்டர் பார்த்தால் போதும் சரியாகி விடும் என்றும் நம்புகிறார். அப்படி ஒரு சாதாரண மனிதருக்குக் காத்திருக்கக்கிறார்கள். நாம் ஏன் ஆண்டவருக்காகக் காத்திருக்கக்கூடாது. அப்படி காத்திருக்கும் போது நம் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்.

கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கிறார். மேலும் பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடையகண் அவர்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. நம்முடைய பிதாவாகிய தேவன் அவருக்குப் பயந்தவர்கள் மேல் எவ்வளவு கரிசனையுள்ளவராக இருக்கின்றார் என்று பார்த்தீர்களா! என் அன்பு சகோதரனே! சகோதரியே! நம்மை மரணத்தினின்று விடுதலை செய்யவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் நம்மை மீட்பதற்காக தமது சொந்த ஜீவனையே கொடுத்தார். இப்பேர்பட்ட கர்த்தர் மீண்டும் வருவதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். நாம் அவருக்காக காத்திருக்க வேண்டும் எப்படி காத்திருக்க வேண்டுமென்று கேட்கிறீர்களா? எப்பொழுதும் விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரைப் பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது. என்று தாவீது சொல்வது போல் சங், 130:6 காத்திருக்க வேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை நாம் அறியோம் ஆகையால் ஜாமக்காரரைப் பார்க்கிலும் அதிக விழிப்புடனும். ஜெபத்துடனும் காத்திருப்போம்.

காத்திருப்பதில் மற்றொரு காரியம். நீதி கிடைக்குமென்று ஆவியைக்கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோட காத்திருக்கிறோம். என்று கலா 6:5ல் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதை வாசிக்கிறோம். இப்படிப்பட்ட நம்பிக்கையோடே கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும். அப்பொழுது உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார் ஏசா 30:18 கர்த்தர் தாமே உங்களை முற்றிலும் காத்து வழி நடத்துவாராக!

ஆமென்,

## ★ சபை செய்திகள்

1) 4-7-93 அன்று சகோ. பெருமாள், சகோதரிகள் முருகேஸ்வரி, கண்ணம்மாள் வெள்ளையம்மாள் நால்வரும் கிறிஸ்துவின் வசனத்திற்கு கீழ்படித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். இவர்களுக்கு வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபை ஊழியர் சகோ. அர்ச்சுனன் அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார்.

2) சகோ. பெருமாளுக்கும், சகோதரி. முருகேஸ்வரிக்கும் பரிசுத்த விவாகம் வருகின்ற 11-7-93 அன்று மாலை 6மணிக்கு நடைபெறவுள்ளது

3) ஜுன் மாதம் முதல் ஒவ்வொரு புதன்கிழமையும் மாலை 7-30 முதல் 8-30 வரை வேத வகுப்புகள் வதிலை கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில் நடைபெற்றுவருகிறது. பங்குகொண்டு பயன்பெறுங்கள்.

## ★ பரிசு

ஜுன் இதழின் தேவ அறிவுப் போட்டியில் பரிசு பெறுபவர்.

1) சகோதரி. எலிசபெத் கலைவாணி, வத்தலக்குண்டு

## ★ ஜுன் மாத இதழின் விடைகள்

1) அழைத்து மிருக்கிறார் ரோ 8:30
2) ரெகொபெயாம் II நாளா 11;21
3) பவுல் அப் 27:33
4) கிதியோன் நியா 6;38
5) இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாதவர்கள் II யோவா 7
6) தேவனாகிய கர்த்தர்
7) எசேக்கியாவிற்கு
8) உம்முடைய சத்தியத்தை
9) சீமோன்
10) கணவன்

## ★ இம்மாத வேத அறிவுப்போட்டி

1. நீதிமான் தள்ளாடுவது எதற்கு ஒப்பாகும்?
2. யெருபாகாலின் குமாரர் எத்தனைபேர்?
3. ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் எதைக் காணமாட்டான்?
4. எலியா வந்தாயிற்றா?
5. இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாக எப்படியிருக்கிறது?
6. நன்மைசெய்கிறவன் யாரால் உண்டாயிருக்கிறான்?
7. மேலான அதிகாரமுள்ளவர்களுக்கு எப்படியிருக்க வேண்டும்?
8. ஆயி பட்டணம் தோல்வியடைய காரணமாக இருந்தவன் யார்?
9. தேவனுடைய ஆலயத்தை கொடுத்தால் அவனை யார் கெடுப்பது?
10. இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போல் ஆகுவது எது?

## ★ தேவை தேவை தேவை

ஆண்டவருக்கு ஊழியம் செய்ய அர்ப்பணிப்புள்ள வாலிப ச கோ த ர ர் க ள் தேவை. இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

முதல்வர்
தேசிய வேதாகம கல்லூரி,
13, சாய்நகர்,
சென்னை-600 082. இந்தியா

If Undelivered Please Return To:
**THE EDITOR**
**Word of Christ Post Box No. 5**
**BATLAGUNDU-624 202. Anna Dt.**

---

**For private Circulation only.**

---

Published by Batlagundu Church of Christ and
Printed at Shanthi Printers Batlagundu.